### டெல்லியில் நடைபெறும் அணிவகுப்பில்

# மார்த்தாண்டம் கிறிஸ்தவ கல்லூரி மாணவி பங்கேற்கிறார்

குழித்துறை, ஆக.14-

டெல்லியில் மத்திய அரசு சார்பில் நாளை (திங்கட்கிழமை) 75-வது சுதந்திர தின அமுதவிழா நடைபெறுகிறது. இந்த விழாவில் நடைபெறும் அணி வகுப்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள குமரி மாவட்டத்தில் இருந்து மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி என்.சி.சி.சார்பாக கணிதவியல் துறை மாணவி ஆர்யா தேர்வாகியுள்ளார். இதையடுத்து அந்த மாணவி டெல்லிக்கு புறப்பட்டு சென்றுள்ளார். மேலும் மாணவி ஆர்யா பிரதமர் மோடி நடத்தும் கலந்துரையாடல் நிகழ்ச்சியிலும் பங்கேற்கிறார்.



டெல்லி நிகழ்ச்சியில் கலந்து கொள்ள புறப்பட்டு சென்ற மாணவி ஆர்யாவை மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி தாளாளர் டாக்டர் வினோத் குமார், கல்லூரி முதல்வர் பால்ராஜ், என்.சி.சி. அதிகாரி கேப்டன் பாயிண்ட் வெஸ்லி மற்றும் மாணவ-மாணவிகள் வாழ்த்தி வழியனுப்பி வைத்தனர்.